மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அங்கே குழாய்கள் பழுதடைந்திருந்தால் அந்தக் குழாய்களை உடனடியாகப் பார்வையிட்டு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

29—

அணை கட்டுதல்

***38872—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, பெரப்பன்சோலை ஊராட்சியில் உள்ள பள்ளிப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) ஆகவே வினா எழவில்லை.

திருமதி கு. கலாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களை பாதுகாத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா தங்கத் தாரகையே, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வதம் செய்து வீரப் புரட்சி செய்த வீராங்கனையே, எங்கள் தாயே, உங்களை வணங்கி எனது கேள்வியினைத் தொடங்குகிறேன். சேந்தமங்கலம் தொகுதியைச் சார்ந்த கொல்லிமலைப் பகுதியில் உள்ள, கொல்லிமலையில் பெய்கின்ற மழை நீரும், ஊற்று நீரும் சேர்ந்து பள்ளிப்பாறையில் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெரப்பன்சோலை ஊராட்சியில், சுற்றியுள்ள மலைவாழ் மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். சுமார் ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சுமார் 2000 ஏக்கர் பாசன நிலங்கள் உள்ளன. பள்ளிப்பாறை ஆற்றின்

2005 பிப்ரவரி 3]

குறுக்கே, பெரப்பன்சோலை ஊராட்சியில், ஒரு அணை கட்டினால் இப்பகுதி மக்கள், மலைவாழ் மக்கள், விவசாய மக்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து இந்த அணையைக் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, பெரப்பன் ஊராட்சியில் உள்ள பள்ளிப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்கு, திட்டத்தளம் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் தடுப்பணை கோரும் தளத்திற்கு மேல் பகுதியில், இதே ஆற்றில் சுமார் 600 மீட்டர் தூரத்தில் புதூர் பாலப்பட்டி-பெரியாறு என்ற அணைக்கட்டு கட்டப்பட்டு, வாய்க்கால் மூலம் பாசனம் நடைபெற்று வருகிறது. மேலும், திட்டம் கோரும் தளத்திற்குக் கீழ்ப் பகுதியில் சுமார் 500 மீட்டர் தூரத்தில் சாலக்காடு-பெரியாறு என்ற அணைக்கட்டு உள்ளது. அதன் வாய்க்கால் மூலமும் பாசனம் நடைபெற்று வருகிறது. அணை கட்டக் கோரும் இடம் மேற்கூறிய இரு அணைக்கட்டு அமைந்திருக்கும் இடத்திற்கு ஒரு கிலோமீட்டர் இடைவெளிக்கு உள்ளேயே அமைந்துள்ளதால் தொழில்நுட்ப ரீதியாக புதிய அணை கட்டும் சாத்தியக்கூறு ஏதும் தற்போது இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கு. கலாவதி.

திருமதி கு. கலாவதி: அந்த அணை மிகவும் சிறியதாக இருப்பதால், இன்னும் கொஞ்சம் உயரமாக ஒரு திட்டத்தினை, ஒரு பெரிய திட்டத்தினைப் போட்டு கட்டினால், அந்த 2500 ஏக்கரிலுள்ள மலைவாழ் மக்கள், வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால், இதை மறுபடியும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை எங்களுக்குச் செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு மறுபரிசீலனைக்கு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.